©
தமிழ்நாடு அரசு
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 17] சென்னை, புதன்கிழமை, மே 5, 2010
சித்திரை 22, திருவள்ளுவர் ஆண்டு–2041

## பகுதி VI—பிரிவு 1 இன் இணைப்பு

### துறைத் தலைவர்களுடைய அறிவிப்புகள்

**1983–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டப்பிரிவின்கீழ் சங்கங்களைக் கலைத்தல் மற்றும் கலைத்தல் அலுவலரை நியமித்தல் பற்றிய அறிவிக்கைகள்.**

**இ.இ. 343. மதுரை கோட்ஸ் நிர்வாக அலுவலக பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன நாணய சங்கம்.**

*(ஜி.எல். 1/2010 க.கு.)*

தூத்துக்குடி சரகத்தில் உள்ள இ.இ. 343. மதுரை கோட்ஸ் நிர்வாக அலுவலக பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன நாணய சங்கம் வாழ திறனுடைய வாய்ப்பு இல்லாததால் 1983–ம் வருட தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் பிரிவு 137 (2) (ஏ)–யின்கீழ் தூத்துக்குடி சரக கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளரின் ஆணை ந.க. 94/2008 ந.வ. (சட்டப் பிரிவு 137 (2) (ஏ)–யின் கீழானது), நாள்: 18 மார்ச் 2010–ன்படி கலைக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி,
2010 மார்ச் 31.

**பொ. சுப்பையா,**
*துணைப் பதிவாளர்.*

**ஏ.எச்.டி. சிஜி. 74. மானாமதி ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம்.**

*(ந.க. எண் 4635/ஈ/2008.)*

காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டு கோட்டம் மானாமதி கிராமத்தில் உள்ள ஏ.எச்.டி சிஜி. 74. மானாமதி ஆடு வளர்ப்புக் கூட்டுறவு சங்கம் 23–03–2001–க்கு பின் செயலற்றுள்ளது. சங்க உறுப்பினர்கள் சங்கத்தை நடத்துவதற்கு ஆர்வம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். மீண்டும் சங்கத்தை செயல்பட செய்வதற்கான வாயப்புகள் இல்லை. ஆதலால் இதன்மூலம், ஏ.எச்.டி. சிஜி. எண். 74. மானாமதி ஆடு வளர்ப்புக் கூட்டுறவு சங்கத்தின் விவகாரங்களை தமிழ்நாடு கூட்டுறவு சங்க சட்டப்பிரிவு 1983–ன் பிரிவு 137(2)–ன்கீழ் கலைத்து உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

மேற்சொல்லப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு சங்கம் சட்டம் 1983–ன் பிரிவு 138–ன்கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களை பயன்படுத்தும் முகமாக சங்க விவகாரங்களை கலைப்பதற்கு உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை செங்கல்பட்டு கலைப்பு அதிகாரியாக இதன் மூலம் நியமிக்கப்படுகிறார்.

இந்த உத்தரவு 2010–ம் வருடம் மார்ச் மாதம் 3–ம் தேதி முதல் அமுலுக்கு வருகிறது.

காஞ்சிபுரம்,
2010 மார்ச் 3.

**எஸ். கல்யாணராமன்,**
*மண்டல இணை இயக்குநர் (கூ.பொ.).*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

DTP—VI-1 Sup. (17)